
வணிகக்கல்வி

வணிக வங்கிகளினால் பேணப்படுகின்ற பல்வேறு வைப்புக்களும் கடன்களும்



e தக்சலாவ கல்விக்கூடம் ™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சிமட்டம் 7.4 : வணிக வங்கிகளினால் பேணப்படுகின்ற பல்வேறு வைப்புக்களும் அவற்றினால் வழங்கப்படுகின்ற கடன்களும் வணிகங்களின் செயற்பாடுகளிலும் வளர்ச்சிகளிலும் ஏற்படுத்தும் தாக்கங்களை சுட்டிக்காட்டுவார்



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி.சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர், வர்த்தகம், வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு)
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த.தொ.தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

தெ
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வைப்புக்கள் தொடர்பான சேவை

வணிக வங்கிகளில் ஆரம்பிக்கக்கூடிய வைப்புக்களை பொதுவாக 3 வகைப்படுத்தலாம்

1. சேமிப்பு வைப்பு
2. நிலையான வைப்பு
3. நடைமுறை வைப்பு

சேமிப்பு வைப்பு (Savings Account)

- வணிகர்கள் மட்டுமன்றி எந்தவொரு நபரும் தாம் விரும்பிய பொழுது பணத்தை வைப்பிலிடுவதற்கும் மீள எடுப்பதற்கும் இயலுமான வங்கிக் கணக்கு இதுவாகும்.
- இக்கணக்கு வகைக்கு மீதியின் அடிப்படையில் வட்டி கிடைக்கப்பெறும்.
- இக்கணக்கு வகைகளை தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஆரம்பிக்க முடியும்.
- டெலர் அட்டையைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல் செய்யலாம்.

சேமிப்பு கணக்கொன்றை ஆரம்பிக்கும் முறை

1. கரும பீடத்தில் கணக்கினை ஆரம்பிப்பதற்குரிய விண்ணப்பப்படிவம், காசு வைப்புத்தொண்டு, வாடிக்கையாளர் தொடர்ான தகவல்களைள அறிந்து கொள்ளும் படிவம் (KYC Form) போன்றவற்றை பூர்த்தி செய்து ஒப்படைத்தல்.
2. அடையாளத்தினை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டையை ஒப்படைத்தல்.
3. வங்கியினால் குறிப்பிட்ட ஆகக் குறைந்த தொகை அல்லது அதிலும் கூடிய தொகையை கணக்கில் வைப்பிலிடல்.
4. இறுதியாக வங்கியினால் சேமிப்புக் கணக்குப் புத்தகமொன்று வாடிக்ககையாளருக்கு வழங்கப்படும்.

தற்பாது வணிக வங்கிகள் பொதுவாக சாதாரண சேமிப்பு வைப்புக் கணக்குகளுக்கு மேலாக பல்வேறு தரப்பினரும் பணம் வைப்பிலிடக்கூடியவாறு பல பெயர்களில் விசேட சேமிப்புக்கணக்கு வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

உதாரணம்:

1. முதலீட்டுச் சேமிப்புக்கணக்குகள்
2. பெண்களுக்கான சேமிப்புக்கணக்குகள்
3. சிரேஷ்ட பிரஜைகள் கணக்குகள்
4. சிறுவர் சேமிப்புக் கணக்குகள்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி.சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர், வர்த்தகம், வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு)
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த.தொ.தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

தெ
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

சேமிப்பு வைப்புக்களுக்கு பொதுவாக பின்வரும் நன்மைகளை பெற்றுக்கொள்ளலாம்

1. பணத்திற்கு பாதுகாப்புக் கிடைத்தல்
2. வட்டி வருமானமொன்று கிடைத்தல்
3. எச்சந்தர்ப்பத்திலும் பணத்தை வைப்பிலிடவும் மீளப்பெறவும் முடியும்
4. அவசர தேவைகளின்போது இலகுவாகப் பணத்தை பெற்றுக்கொள்ள முடிதல்
5. தன்னியக்க ரெலர் இயந்திரத்தின் மூலம் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
6. வரவு அட்டைகள் மூலம் கொடுப்பனவு செய்ய முடிதல்
7. சில விசேட சேமிப்பு கணக்குகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றது

உதாரணம்: Pathum Vimana, Jaya Sri

நிலையான வைப்பு

- குறித்த காலவரையறை ஒன்றிற்காக நிலையான வட்டி வீதத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கக்கூடிய வைப்புக்களே நிலையான வைப்புக்களாகும்.
- நிலையான வைப்புக்கள் பின்வரும் பண்புகளை கொண்டுள்ளன
  - ◊ யானும் குறிப்பிட்ட கால வரையறை ஒன்றிக்காக வைப்புக்களைப் பேணல்.
  - ◊ வைப்புக்களின் காலம், பணத்தொகைக்கு அமைய வட்டி வீதம் வேறுபடும்.
  - ◊ சாதாரண சேமிப்புக்கணக்குகளை விட அதிக வட்டி வீதம் கிடைக்கும்.
  - ◊ நிலையான வைப்புச் சான்றிதழைப் பிணையாக வைத்து குறிப்பிட்ட வீதம் வரை கடன்களை பெற்றுக்கொள்ள முடியும்.
  - ◊ வைப்பிலிட்ட திகதி, வைப்பிலிட்ட தொகை, முடிவடையும் காலம் என்பன போன்ற விபரங்கள் உள்ளடக்கப்பட்ட வைப்புச்சான்றிதழ் ஒன்று வங்கியினால் வழங்கப்படும்.

நிலையான வைப்புக் கணக்கொன்றை ஆரம்பித்தல்

- வங்கியினால் வழங்கப்படும் வைப்புக்களை ஆரம்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம், காசு வைப்புத்துண்டு, உள்நாட்டு வருமான வரிச்சட்டத்திற்கமைய மேற்கொள்ளப்படும் கூற்று வாடிக்கையாளர் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளும் படிவம் போன்றவற்றை பூரணப்படுத்தி கையொப்பமிட்டு ஒப்படைத்தல்
- ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டையை ஒப்படைத்தல்
- இறுதியாக வங்கியினால் நிலையான வைப்புச்சான்றிதழ் ஒன்று வாடிக்கையாளருக்கு வழங்கப்படும்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி.சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர், வர்த்தகம், வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு)
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த.தொ.தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

தெ
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



நடைமுறைக் கணக்கு

காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வசதி கொண்டதும் மீதியின் அடிப்படையில் வட்டி கிடைக்கப்பெறாத வைப்பு இதுவாகும்.

நடைமுறைக் கணக்கொன்றை பேணுவதால் கிடைக்கும் நன்மைகள்

1. காசோலைகள் மூலம் பாதுகாப்பாகக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய முடியும்.
2. வங்கி மேலதிகப்பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடிதல்.
3. நேரடி வைப்புக்களை நடைமுறைப்படுத்தல்.
4. நிலையியற் கட்டளைகளைச் செயற்படுத்தல்.
5. வங்கிக் கூற்றை பெறுதல்.
6. டெலர் அட்டையைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல் செய்யலாம்.

நடைமுறைக்கணக்கொன்றை ஆரம்பிக்கும் நடைமுறைகள்

1. நடைமுறைக் கணக்கொன்றினை ஆரம்பிக்கும் போது அவ் வணிக வங்கியில் நடைமுறைக்கணக்கொன்றைக் கொண்டுள்ள வாடிக்கையாளர் ஒருவரினால் உறுதிப்படுத்துதல்.
2. நடைமுறைக்கணக்கிற்கான விண்ணப்பப்படிவம், பண வைப்புத்துண்டு ஆகியவற்றை பூரணப்படுத்தி தேசிய அடையாள அட்டையுடன் ஒப்படைத்தல்.

கடன் தொடர்பான சேவைகள்

1. கடன் வழங்கல் - குறிப்பிட்ட வட்டி வீதத்தில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற கடன்தொகை மற்றும் அதற்குரிய வட்டியுடன் மீளச்செலுத்தும் நிபந்தனையுடன் ஒப்பந்தம் செய்து வங்கியொன்றினால் வழங்கப்படுகின்ற பணத்தொகையாகும். இது இரு வகைப்படும்.
    - **வணிகக்கடன்-** தனியொருவருக்கு அல்லது நிறுவனத்திற்கு தமது வணிகக்களுக்காகக் குறுங்கால, நடுத்தரகால, நீண்டகால அடிப்படையில் தேவைப்படுகின்ற கடன்களை வழங்குவதாகும்.
    - **நுகர்வுக்கடன்** - சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கும் அவசர இடர்களை நிவர்த்தி செய்வதற்குமான நுகர்வோருக்கு வங்கி வழங்குகின்ற கடனாகும்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி.சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர், வர்த்தகம், வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு)
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த.தொ.தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

தெ
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

2. வங்கி மேலதிகப்பற்று வழங்கல் :

- வங்கியில் நடைமுறைக்கணக்கை வைத்துள்ள வாடிக்கையாளனுக்கு வங்கி கணக்கில் உள்ள தொகையினை விட மேலதிகமான தொகைக்கு காசோலை வரைவதன் மூலம் நிதி பெற வசதியளிக்கும் சேவையினை இது குறிக்கும்.
- வங்கி மேலதிகப்பற்று வசதி வழங்கப்பட்டிருக்கும் போது அப்பெறுமானத்தொகை வரைக்கும் வாடிக்கையாளர்ளின் காசோலைகளுக்கான கொடுப்பனவானது வங்கியினால் மேற்கொள்ளப்படும்.
- பொதுவாக மேலதிகப்பற்றுக்காக வட்டி அறவிடப்படும்.

வங்கி மேலதிகப்பற்றின் வகைகள்

வகைகள்	எண்ணக்கரு விளக்கம்	பொதுவான பண்புகள்
தற்காலிக மேலதிகப்பற்று	நடைமுறைக் கணக்குரிமையாளர் நடைமுறைக் கணக்கிலுள்ள மீதியை விடக் கூடிய தொகைக்கு காசோலை வழங்கப் பட்டிருக்கும் போது வங்கியினால் செலுத்தப்படும் அம்மேலதிக மீதிக்கான பணம் செலுத்துவதைக் குறிக்கும்	1. வங்கிக்கு விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை 2. முகாமையாளரின் விருப்பத்திற்கிணங்க வழங்கப்படும் 3. வட்டி வீதம் அதிகம் 4. பிணைகளை வேண்டியதில்லை 5. குறுங்காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும்
நிரந்தர மேலதிகப்பற்று	நடைமுறைக் கணக்குரிமையாளர் வங்கிக்கு விண்ணப்பித்து தொடர்ச்சியாக குறிப்பிட்ட காலத்திற்கு பெற்றுக் கொள்ளக் கூடிய மேலதிகப் பற்று வசதியைக் குறிக்கும்	1. விண்ணப்பித்தல் அவசியம் 2. தற்காலிக மேலதிகப்பற்றினை விட வட்டி வீதம் குறைவு 3. ஒப்பீட்டு ரீதியில் நீண்டகாலம் 4. பிணைகள் உத்தரவாதங்களை வழங்குதல் வேண்டும்

Copyright www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி.சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர், வர்த்தகம், வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு)
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த.தொ.தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

தெ
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

ஒப்படைகள்

1. உமது பிரதேசத்திலுள்ள யாதாயினும் மூன்று வணிக வங்கிகளைத் தெரிவு செய்து அவ்வங்கிகளின் வைப்புக்கள் தொடர்பான சேவைகள், கடன் வழங்கல் தொடர்பான சேவைகளை ஆராய்க
2. மேலே நீர் தெரிவு செய்த வணிக வங்கிகளிடையே மேலதிகப்பற்று வழங்குதல் தொடர்பான நடைமுறைகளை விளக்குக
3. வணிக வங்கிகள் பேணுகின்ற பின்வரும் வைப்புச் சோடிகளுக்கு இடையில் காணப்படுகின்ற ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பீடு செய்க

    I. நடைமுறை வைப்பும், சேமிப்பு வைப்பும்

    II. சேமிப்பு வைப்பும், நிலையான வைப்பும்

    III. நடைமுறைவைப்பும், நிலையான வைப்பும்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு : திருமதி.சுபாஜினி நிருபன் (ஆசிரிய ஆலோசகர், வர்த்தகம், வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன் (த.தொ.தொ, ஆசிரியர், யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

தெ

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk